# தமிழ்நாடுவேளாண்மைப் பல்கலைக்கழகம்

## தமிழ்நாடு நெல் ஆராய்ச்சிநிலையம் - ஆடுதுறை

## திருவாரூர் மாவட்டவானிலைசார்ந்தவேளாண் அறிக்கை

(26.06.2024 முதல் 30.06.2024)

**அறிக்கைஎண்: 25/2024** **தேதி : 25.06.2024**

### திருவாரூர் மாவட்டத்தின் கடந்தவாரவானிலை

பெரும்பாலான பகுதிகளில் அதிகபட்ச வெப்பநிலை 35 - 36 °செ ஆகவும் மற்றும் குறைந்தபட்ச வெப்பநிலை 29 - 30 °செ ஆகவும் பதிவானது. மேலும் ஆங்காங்கே மழை பெறப்பட்டது

### திருவாரூர் மாவட்டத்தில் எதிர்பார்க்கப்படும் வானிலை (26.06.2024 முதல் 30.06.2024).

| கடந்த வார வானிலை (21.06.2024 முதல் 24.06.2024) | | | | காரணிகள் | அடுத்த ஐந்து நாட்களுக்கான வானிலை முன்னறிவிப்பு (26.06.2024 முதல் 30.06.2024) வரை | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| நாள்-1 21/06 | நாள்-2 22/06 | நாள்-3 23/06 | நாள்-4 24/06 | தேதி | நாள்-1 26/06 | நாள்-2 27/06 | நாள்-3 28/06 | நாள்-4 29/06 | நாள்-5 30/06 |
| 0.0 | 0.0 | 0.0 | 9.9 | மழை (மி.மீ.) | 1 | 2 | 2 | 0 | 0 |
| 36 | 36 | 36 | 35 | அதிகபட்ச வெப்பநிலை (°செ) | 35 | 35 | 34 | 35 | 35 |
| 29 | 29 | 29 | 30 | குறைந்தபட்ச வெப்பநிலை (°செ) | 28 | 27 | 28 | 28 | 29 |
| 6 | 5 | 6 | 5 | மேகமூட்டம் (ஆக்டா) | 6 | 8 | 5 | 6 | 4 |
| 72-65 | 67-64 | 70-67 | 70-68 | அதிகபட்ச மற்றும் குறைந்தபட்ச காற்றின் ஈரப்பதம் (%) | 60-50 | 60-40 | 60-50 | 70-50 | 70-50 |
| 4 | 6 | 4 | 5 | காற்றின் வேகம் (கி.மீ./மணி) | 12 | 14 | 16 | 20 | 26 |
| தென் தென் மேற்கு | மேற்கு தென் மேற்கு | மேற்கு தென் மேற்கு | மேற்கு தென் மேற்கு | காற்றின் திசை | மேற்கு தென் மேற்கு | மேற்கு தென் மேற்கு | தென் மேற்கு | தெற்கு | தெற்கு |

### திருவாரூர் மாவட்டத்திற்கான வானிலை சார்ந்த வேளாண் அறிக்கை

வரும் நாட்களில் வானம் தெளிவாக காணப்படும். 26.06.2024 முதல் 28.06.2024 ஆகிய தினங்களில் லேசான மழை எதிர்பார்க்கப்படுகிறது. அதிகபட்ச வெப்பநிலை 34 - 35 °செ ஆகவும், குறைந்தபட்ச வெப்பநிலை 27 - 29 °செ ஆகவும், காலை நேர காற்றின் ஈரப்பதம் 60 - 70 சதவிகிதமாகவும், மாலை நேர காற்றின் ஈரப்பதம் 40 - 50 சதவிகிதமாகவும், காற்றின் வேகம் 12 – 26 கி.மீ. என்ற அளவுக்கு பெரும்பாலும் தெற்கு திசையிலிருந்து வீசக்கூடும்.

### வேளாண் அறிவுரைகள்

| | |
|---|---|
| பொது | உழவர் பெருமக்கள் அனைவரும் தமிழ் நாடு வேளாண்மை பல்கலைக்கழகம் பரிந்துரைக்கப்பட்ட வேளாண் சார்ந்த செயலிகளை பயன்படுதுமாறு கேட்டுக்கொள்ளபடுகிறது (TNAU AAS, Meghdoot and DAMINI). |

| | | |
|---|---|---|
| நெல் | நடவு வயல் | குறுவை நடவு செய்யும் பொழுது பதினெட்டு முதல் இருபத்தி இரண்டு நாட்கள் வயதுடைய நன்கு வாளிப்பான நாற்றுக்களை உயிர் உரங்களான அசோஸ்பைரில்லம் (1 கிலோ/ 125 மிலி) மற்றும் பாஸ்போபாக்டீரியாவை (1 கிலோ/ 125 மிலி) 40 லிட்டர் தண்ணீரில் இட்டு நாற்றுகளின் வேர் பாகம் கரைசலில் நன்கு நனையுமாறு 15 முதல் 30 நிமிடங்கள் வரை வைத்திருந்து பிறகு 20 x 10 செ.மீ. இடைவெளியில் நடவு செய்ய வேண்டும். |
| பருத்தி | வளர்ச்சி பருவம் | தற்போது நிலவக்கூடிய வானிலையின் காரணமாக பருத்தியில் பூ மற்றும் பிஞ்சு உதிர்வதை தடுக்க நாப்தலின் அசிடிக் அமிலம் 40 பிபிம் கரைசலை விதைத்த 60 மற்றும் 90 வது நாளில் தெளிப்பதால் மொட்டுகள் உதிர்வது குறைக்கப்பட்டு காய்கள் அதிகம் பிடிக்க உதவுகிறது. |
| கரும்பு | வளர்ச்சி பருவம் | தற்போது நிலவக்கூடிய வானிலையின் காரணமாக 5 மாதங்களுக்கு மேலான கரும்பு பயிறில் தோகையை நீக்கி விட்டம் கட்டவும். |
| கால்நடைகளுக்கு | மாடு | விவசாயிகள் கறவை மாடுகளுக்கு போதிய அளவு தாது உப்பு கலவையை அளிக்கலாம் |

**குறுஞ்செய்தி**

உழவர் பெருமக்கள் அனைவரும் தமிழ் நாடு வேளாண்மை பல்கலைக்கழகம் பரிந்துரைக்கப்பட்ட வேளாண் சார்ந்த செயலிகளை பயன்படுதுமாறு கேட்டுக்கொள்ளபடுகிறது (TNAU AAS, Meghdoot and DAMINI).

.

**இயக்குநர்**